**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066940

1. District : மாவட்டம் பெரம்பலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 02 Date: நாள் 13.01.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act - 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 12.01.2021
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை 23.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.01.2021 Time : நேரம் 12.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 10 கி.மீ. கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி பெரம்பலூரிலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் உள்ள பேரளி டோல்கேட்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.P. ரவிக்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. பெரியசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57/2021 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர் & ஆய்வாளர் (g) Address : முகவரி ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வாளர், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. ராம்குமார், மாவட்ட மேலாளர், 2) [illegible] மேற்பார்வையாளர் 3) [illegible], மேற்பார்வையாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC), பெரம்பலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 13.01.2021 மதியம் சுமார் 12.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு.K.P.ரவிகுமார் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த டைப் செய்யப்பட்டிருந்த புகார் பின்வருமாறு:- அனுப்புநர் K.P.ரவிக்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அய்யா, பொருள் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது- கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தது- சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோருதல்- தொடர்பாக. நான் 12.01.2021-ம் தேதி அலுவலகத்தில் இருந்தபோது மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.சுலோச்சனா அவர்கள் பெரம்பலூர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (TASMAC), மாவட்ட மேலாளர் அவர்கள் பிற்பகல் 03.00 மணிக்கு அவரது

(Separate sheet enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K.P. Ravi C.I 13/1/21

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. SULOCHANA
Rank: நிலை INSPECTOR of Police No. எண் ........
V&AC, Perambalur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

அலுவலகத்தில், அவரது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து TASMAC கடை மேற்பார்வையாளர்களையும் அழைத்து மாதாந்திர கூட்டம் நடத்துவதாகவும், கூட்டம் முடிந்த பின்னர் மதுபான தயாரிப்பு நிறுவன விற்பனை பிரதிநிதிகளிடமிருந்து அவர்களது நிறுவன மதுபானங்களை கொள்முதல் செய்வதற்காகவும், பார் உரிமையாளர் களிடமிருந்தும் மற்றும் சில்லறை விற்பனை கடை மேற்பார்வையாளர்களிடமிருந்தும் அலுவலக மேற்பார்வையாளர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்று ஊருக்கு செல்லவிருப்பதாக தெரிவித்த தகவலின்பேரில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் என்னை மேற்படி அலுவலுக்கு செல்லுமாறு உத்தரவிட்டதன்பேரில் நான் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு பிற்பகல் சுமார் 03.00 மணியளவில் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கிருந்த ஆய்வாளர் திருமதி.சுலோச்சனா மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் சென்று மாலை சுமார் 06.00 மணியளவில் பெரம்பலூரிலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் உள்ள பேரளி டோல்கேட்டில் மாருதி ஸ்விப்ட் டிசையர் கார் TN-45 BD-2575-ல் வந்த TASMAC மேலாளர் திரு.ராம்குமார், அவருடன் இருந்த மேற்பார்வையாளர்கள் திரு.கண்ணதாசன், திரு.முருகவேல் ஆகியோர்களை சோதனை செய்தபோது அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற அனுமானத்தில் மேற்படி திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் ஆய்வின்போது ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆய்வு செயல்முறைகள், கைப்பற்றிய பணம் ரூபாய் 97000/-த்தையும் அத்துடன் இருந்த கடைகள் பெயர் மற்றும் தொகை குறிப்பிட்ட துண்டு சீட்டு மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். சம்மந்தப்பட்ட அலுவலர்கள் திரு.ராம்குமார், திரு.கண்ணதாசன் மற்றும் திரு.முருகவேல் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஆங்கிலத்தில் கையொப்பம்/13/1/21 ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், திருச்சி மாவட்டம் 13.01.2021. ஐயா மேற்படி புகாரை பெற்று நிலைய குற்ற எண்.02/2021 u/s 7 of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் வாதியின் புகாரின் அசலையும் கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பியும், நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன். கையொப்பம்/13/01/2021 காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, பெரம்பலூர்.

13/01/2021

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

பெரம்பலூர்.